


# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita




## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## அருள் மொழிகள்



மனிதனுடைய அகம்பாவத்துக்கு காரணமான அவனுடைய பணம், பாண்டித்தியம் அல்லது பலம் அவனை கர்வம் கொள்ள செய்கிறது, ஆனால் இந்த மமதை உண்மையில் சத்ரு என்பதை மனிதன் புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் அது அவனை மிகவும் தொந்தரவு செய்து தவறுகளிளும் ஈடுபட வைக்கிறது.

தன்னை யாரும் எதிர்க்க முடியாது என்று அவன் தவறாக நினைக்கிறான், செய்கிறான். ஆனால் அவனுடைய கெட்ட கர்மாவினால் அவன் கஷ்டங்களை அனுபவிப்பது நிச்சயம். அகம்பாவத்தை கைவிட்டு இருந்தாலே இதையெல்லாம் தவிர்த்து இருக்கமுடியும்.

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்

## நீதிசதகம்

रत्नै: महा अब्धे: तुतुषु: न देवा: न भेजिरे भीमविषेण भीतिम् ।
सुधा बिना न प्रययुः विरामं न निश्चित अर्थात् विरमन्ति धीराः ||

ரத்னை: மஹா அப்3தே4: துதுஷு: ந தே3வா: ந பே4ஜிரே பீ4மவிஷேண பீ4திம் .
ஸுதா4 பி3னா ந ப்ரயயு: விராமம்' ந நிஶ்சித அர்தா2த் விரமந்தி தீ4ரா: ||

அம்ருதம் வேண்டி பாற்கடலைக் கடையும் சமயத்தில் அதிலிருந்து கிடைத்த விலைமதிப்பற்ற ரத்னங்களை தேவர்கள் விரும்பவில்லை. வாஸுகியின் வாயிலிருந்து வெளிக்கிளம்பிய ஆலகால விஷத்தையும் அவர்கள் கண்டு அஞ்சவில்லை.

அம்ருதம் கிடைக்கும் வரை தங்கள் முயற்சியிலிருந்து சிறிதும் ஓயவில்லை. புத்திமான்கள் செய்யவேண்டியதை சரிவர செய்து முடிக்காமல் மகிழ்வதில்லை.

Our Mail ID : Info@voiceofjagadguru.com

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

# விதுர நீதி

चत्वारि राम्रा तु महाबलेन वर्ज्यान्याहुः पण्डितस्तानि विद्यात् ।
अल्प ओरज्ञैः सह मन्त्रं न कुर्यान्न दीर्घसूत्रै रलसैश्चारणैश्च ॥

சத்வாரி ராம்ரா து மஹாப³லேன வர்ஜ்யான்யாஹு: பண்டி³தஸ்தானி வித்³யாத் .
அல்ப ஓரஜ்ஞை: ஸஹ மந்த்ரம்’ ந குர்யான்ன தீ³ர்க⁴ஸூத்ரை ரலஸைஶ்சாரணைஶ்ச ..

அரசன் இந்த நான்கு காரியங்களை விட்டுவிட வேண்டும். அதை அறிவாளி என்னவென்று அறிய வேண்டும் அவைகளோவெனில் அல்ப புத்தியுள்ளவர்களுடனும், சீக்கிரமாகச் செய்ய வேண்டிய காரியத்தை தாமதித்துச் செய்கிறவனுடனும், சோம்பேறிகளுடனும், வேலை செய்யாமல் புகழ்ந்து பேச்சை மட்டும் பேசிக் கொண்டிருப்பவர்களுடனும் மந்திராலோசனை செய்யக்கூடாது.

चत्वारि ते तात गृहे वसन्तु श्रियाऽभिजुष्टस्य गृहस्थधर्मे ।
वृद्धो प्क्ज्ञातिरवसन्नः कुलीनः सखा दरिद्रो भगिनी चानपत्या ॥ ३८

சத்வாரி தே தாத க்³ரு’ஹே வஸந்து ஶ்ரியா(அ)பி⁴ஜுஷ்டஸ்ய க்³ரு’ஹஸ்த²த⁴ர்மே |
வ்ரு’த்³தோ⁴ ப்க்ஜ்ஞாதிரவஸன்ன: குலீன: ஸகா² த³ரித்³ரோ ப⁴கி³னீ சானபத்யா ||38

ஓ அரசனே, நிறம்ப பொருளுள்ள கிரஹஸ்த தர்மத்தில் இருக்கும் உனது வீட்டில் இந்நான்கு பேர்களும் எப்பொழுதும் வஸிக்கட்டும். வயது முதிர்ந்த பங்காளியும், பந்துக்களில்லாத ஸத்குலத்தில் பிறந்தவனும், தரித்திரனான ஸ்னேஹிதனும், குழந்தையில்லாத சகோதரியுமாவார்கள். (வயது முதிர்ந்த பங்காளி யாவருக்கும் குலதர்மங்களை உபதேசிப்பார். ஆதரவற்ற ஸத் குலத்தில் பிறந்தவன் குழந்தைகளுக்கு ஸதாசாரங்களை உபதேசிப்பான். தரித்ரனான ஸ்னேஹிதன் நன்மையை உபதேசிப்பான். குழந்தை இல்லாத சகோதரி பொருளை பாதுகாப்பாள்.)

देवतानां च संकल्पं अनुभावं व धीमताम् ।
विनयं कृतविद्यानां विनाशं पापकर्मिणाम् ॥

தே³வதானாம்’ ச ஸங்கல்பம்’ அனுபா⁴வம்’ வ தீ⁴மதாம் .
வினயம்’ க்ரு’தவித்³யானாம்’ விநாஶம்’ பாபகர்மிணாம் ..

பிருஹஸ்பதியானவர் உடன் பலனை அளிக்கக் கூடிய நான்கு விஷயங்களை உபதேசித்தார். அவைகளை உமக்குக் கூறுகிறேன். ஓ அரசனே, கேளும், தேவதைகளுடைய எண்ணம், புத்திமான்களுடைய மஹிமை, நன்கு படித்தவர் களுடைய வணக்கம், பாபிகளுடைய கெட்ட செயல் இவைகள் உடன் பயன் அளிக்கும். (தேவர்களை நாம் பூஜித்ததும் அவர்கள் நமக்கு அனுக்ரஹிக்க வேண்டும் என்று நினைத்ததும் பயன் கிட்டிவிடும், புத்திமான்களான மஹான்களை ஸேவித்தால் அவர்களுடைய மஹிமை உடன் நமக்குப் பயனை அளித்துவிடும்.)

(தொடரும்….)

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஆசார்யாளின் உபதேசங்கள்

**(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)**

# தவறுகளின் மூல காரணம்

உலகத்திலே மனிதனுக்கு இரண்டு விஷயங்களில் "மோஹம்" உண்டாகிறது. அவை "பெண்" மற்றும் "பொன்" என்பவையே. இந்த இரண்டிலும் மோஹமடைந்தவன் தவறுகளைச் செய்ய ஆரம்பிக்கின்றான். எவனுக்கு இந்த இரண்டிலும் மோஹம் இல்லையோ அவனே "மஹாத்மா" எனப்படுகிறான்.

இந்த இரண்டு விஷயங்களிலும் மோஹமடைந்ததால் அழிந்தவர்களுக்கு உதாரணங்கள் இராமாயணம் மற்றும் மஹாபாரதம் ஆகிய காவியங்களில் காட்டப்படுகின்றன. பெண்ணாசையால் இராவணன் அழிந்தான். பொன் (செல்வம் மற்றும் இராஜ்ஜியம்) ஆசையால் துரியோதனன் அழிந்தான்.

இராவணன் சீதையைத் தவறான பார்வையில் பார்த்தான்; அழிந்து விட்டான். இதனால் என்ன தெரிகிறது என்றால், உலகத்தில் எந்தப் பெண்ணையும் தவறான நோக்கத்தில் பார்க்கக் கூடாது என்பதுதான். நம்முடைய பாரதப் பண்பாட்டிலேகூட, “உலகிலுள்ள அனைத்துப் பெண்களும் தாயாருக்குச் சமானம் என்றுதான் கருதப்பட வேண்டும்" என்பதைத்தானே கூறியிருக்கிறார்கள்! ஒருவன் எப்படிப்பட்ட தீயவனாயினும் சரி, தன் தாயாரின் விஷயத்தில் எவ்விதக் கெட்ட எண்ணத்தோடும் இருக்க மாட்டான். எல்லாப் பெண்களையும் தாயாராக பாவித்தால் மனதிலே எவ்வித விகாரமும் ஏற்படாது. தேவீமாஹாத்மியத்திலே தேவதைகள் அந்த பரதேவதையைத் துதிக்கும்போது "ஸகல ஸ்த்ரீகளும் உன் ஸ்வரூபமே" என்று கூறுகிறார்கள். இதைப் பின்பற்றும் வண்ணமாகத்தான் நம்முடைய முன்னோர்களும் நமக்கு வழிமுறைகளை உபதேசித்திருக்கிறார்கள். இதற்கு மாறாக நாம் நடந்தோமானால் அது மிகப் பெரும் தவறாகிவிடும்.

மோஹத்தின் இரண்டாவது விஷயமாக "பொன்" என்பது இருந்து வருகிறது. சிறு வயதிலே நான் ஒரு சம்பவத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அலெக்சாண்டர் என்னும் அரசன் ஒருவன். உலகம் முழுவதையும் வெற்றி கொள்ள வேண்டுமென்னும் பேராசையால் பல நாடுகளை வென்று பாரதத்திற்கு வந்தானாம். அவன் முகாம் இட்டிருந்த இடத்திற்கு அருகிலிருந்த வயலில் இரண்டு ஆட்கள் உரத்த குரலுடன் சண்டை போட்டுக் கொண்டிருப்பதைக் கண்டானாம். "அவர்களுக்குள் என்ன பிரச்சினை எனக் கேட்டு வா" என தனது காவலாளிகளில் ஒருவனை அனுப்பி வைத்தானாம் அலெக்சாண்டர். விஷயத்தைக் கேட்டுத் திரும்பிய அந்த காவலாளி அலெக்சாண்டரிடம், "அந்த நிலத்தை ஒருவன் மற்றவனுக்கு விற்றிருக்கிறான். வாங்கியவன் அந்த நிலத்தை

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

உழுகையில் பூமிக்குள் இருந்த புதையல் ஒன்று வெளிப்பட்டு இருக்கிறது. இந்த நிலத்தை மட்டும்தானே நான் வாங்கியிருக்கிறேன்; இந்தப் புதையலை நான் எப்படிச் சொந்தமாக்கிக் கொள்வது என எண்ணி அந்தப் புதையலை தனக்கு அந்த நிலத்தை விற்றவனையே எடுத்துக்கொள்ளச் சொல்லி வற்புறுத்த, மற்றவனோ, 'எப்போது இந்த நிலத்தை உனக்கு விற்றேனோ, அப்போதே அதிலுள்ள அனைத்துமே உனக்கு என்று எழுதித்தானே விற்றேன்; ஆகவே புதையல் உனக்குத்தான் சொந்தம்' என வாதிட, அந்த வாதமே இப்போது உரத்த குரலில் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!" என்று கூறினான். இதைக் கேட்ட அலெக்சாண்டர் வெட்கித் தலைகுனிந்தானாம். "எப்படிப்பட்ட உத்தமர்கள் வாழ்ந்து கொண்டு இருக்கும் நாடு இது! பிறரது சொத்திற்கு சிறிதும் ஆசைப்படாத மஹான்கள் இருக்கின்ற இந்த நாட்டைப்போய் ஜெயிக்க வேண்டும் என்னும் பேராசையோடு வந்திருக்கிறேனே" என அவன் வருந்தினானாம்! சாதாரண கிராமத்தில் இருந்துகொண்டு விவசாயம் செய்து கொண்டிருக்கும் மக்களின் மனதில் சிறிதுகூட ஆசை இல்லாமல், கிடைத்ததை வைத்து திருப்தியடைவதன் மூலம் பரிசுத்தமானதொரு வாழ்க்கையை அவர்கள் மேற்கொண்டிருந்தது நமது பாரத கலாச்சாரத்தின் மேன்மையைக் காட்டுகிறது.

பிறருடைய சொத்தை நாம் சிறிதும் விரும்பக் கூடாது . தெருவில் எவ்வளவோ கல்லும் மண்ணும் நிறைந்து கிடக்கின்ற போதிலும் எவருடைய மனதேனும் அவற்றை நாடுகின்றதா? இதே பாவனையைத்தான் நாம் பிறருடைய சொத்து விஷயத்திலும் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த பாவனை எவனுக்கு இல்லையோ, எவன் பிறர் சொத்தை அபகரிக்க நினைக்கிறானோ அவனுக்கு துரியோதனனுடைய கதையே ஓர் எச்சரிக்கை! துரியோதனன் தனது சிற்றப்பாவின் பிள்ளைகளுக்கு முறைப்படிச் சேரவேண்டிய சொத்துக்களைக் கொடுக்காமல் தானே அனைத்தையும் ஆண்டு அனுபவிக்கப் பேராசைப்பட்டான்; விளைவை அனுபவித்தான்.

நம்முடைய கர்ம பலன்களுக்கேற்ப நமக்கு என்ன (பொருள், வசதி) கிடைக்கிறதோ அதை வைத்துக்கொண்டு நாம் திருப்தியடைய வேண்டும். திருப்தி இல்லாதவனுக்கு சந்தோஷமும் இல்லை, சௌக்கியமுமில்லை. இதை உணர்த்தும் வகையில்தான் பகவத்பாத சங்கரர்,

மூட ஜஹீஹி தனாகம த்ருஷ்ணாம்; குரு ஸத்புத்திம் மனஸி வித்ருஷ்ணாம்

'விவேகமற்றவனே, பொருள் வர வேண்டும் என்ற பேராசையை ஒழித்து விடு. மனதில் பேராசையற்ற நல்ல புத்தியை நாடு" என மிக அழகாகக் கூறியிருக்கிறார்.

(தொடரும் .....)

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

# விஷ்ணு ஸூக்தம்

## ரிக் வேதம்



6. பணிவுமிக்க ஜனங்கள் அவரில் பாதுகாப்பான உறைவிடத்தைத் தேடுகிறார்கள். அவர் இந்த பூமியை அவர்களுக்காக பரந்த வாழ்விடமாகச் செய்துள்ளார். எண்ணற்ற அழகுகள் பொருந்திய இந்த பூமியை விஷ்ணு தமது மகிமையினால் மூன்று முறை அளந்துள்ளார். மகா விஷ்ணுவே! உமது மேலான பெருமை காரணமாக நீர் விஷ்ணு என்று பெயர் பெறுகிறீர். மேலும், இது உமது மகிமைக்குப் பொருத்தமாகவே உள்ளது.

7. எந்த பூமியின் ஏழு பகுதிகளிலும் விஷ்ணு நடந்தாரோ அந்த பூமியின் பாவங்களிலிருந்து தேவர்கள் நம்மைக் காக்கட்டும். விஷ்ணு நடந்தபோது தமது திருவடிகளை மூன்று முறை வைத்தார். அவரது திருப்பாத தூசியால் பூமி மூடப்பட்டது.

8. விஷ்ணு அனைத்தையும் காப்பவரும் யாராலும் ஏமாற்றப்பட முடியாதவரும் ஆவார். அவர் தமது மூன்று அடிகளால் உலகை அளந்து இங்கே தர்மங்களை நிறுவியுள்ளார். இந்திரனின் நெருங்கிய நண்பரான விஷ்ணுவின் செயல்களைப் பாருங்கள். அவற்றின் மூலம் வாழ்க்கை நியதிகளை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

9. பரந்த வானம் போல் கண்களை உடையவர்களான ரிஷிகள் விஷ்ணுவின் மேலான உறைவிடத்தை எப்போதும் காண்கிறார்கள். கவிதையை விரும்புபவர்களும், முனிவர்களும், விழிப்புற்றவர்களுமான இவர்களே விஷ்ணுவின் மேலான அந்த உறைவிடத்தை ஒளிபெறச் செய்கிறார்கள்.

10. அளவற்ற வற்றாத செல்வம் பெறுவதற்கும், மங்கா புகழ் பெறுவதற்கும் அதிராத்ரம் எனப்படும் யாகமே மிக மேலான யாகம் ஆகிறது. அந்த யாகத்தால் எல்லாம் கிடைக்கிறது, எல்லா வெற்றியும் கிடைக்கிறது, எல்லாமே அடையப்படுகிறது,எல்லாம் வளம் பெறுகிறது.

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

விஷ்ணு ஸூக்தம் முற்றும்

## என்றும் புதியவர்

### ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

## 1. பகுத்தறிவு (விவேகம்)




பிரம்மம் ஸத்யம், ஜகத் (உலகம்) தவறான தோற்றமே' என்ற உறுதிப்பாடே விவேகம் என்பதைப் பார்த்தோம். பரம்பொருளை அறிய விரும்புவன் இப்படிப்பட்ட விவேகத்தை மனதில் வளர்க்க வேண்டும். ஆனால் ஆசார்யாளுக்கோ சிறு வயதிலேயே மனதில் "பிரபஞ்சம் அஸத்யம்" என்ற உண்மை மிக உறுதியாக இருந்தது. அதைக் காட்டும் நிகழ்வு ஒன்றைக் கூறுவோம்.

துறவறம் பெறும் சமயத்தில் அவர் ஒரு சிறு பையனாக இருந்ததால் ஆசார்யாளின் இளைய தோற்றத்தைக் கண்டு சில அறிவீனர்கள் அவருடைய மதிநுட்பத்தை உணரவில்லை போலும். சிஷ்ய ஸ்வீகார நிகழ்ச்சி முடிந்த சில நேரத்தில் ஒருவர் ஆசார்யாளை அணுகி, 'ஆசார்யாள் இப்பொழுது தன்னுடைய மோக்ஷத்தை நிச்சயித்துவிட்டார். ஆனால் உலகில் உள்ள மற்றோருக்கு என்ன ஆவது?' என்று கேட்டார். ஆசார்யாள் ஒரு கணமும் தாமதிக்காமல் பதிலுக்கு, 'ஓஹோ! உண்மை அல்லாத உலகிற்கு உண்மை அல்லாத மோக்ஷத்தைத் தேடுகிறீர் போலும்' என்றாராம்."

இனி, விவேகம் பற்றி ஆசார்யாள் தமது அருளுரை ஒன்றில் கொடுத்த விளக்கத்தைப் பார்ப்போம்:

"... முதலில் விவேகம் என்றால் என்ன என்று பார்ப்போம். நாம் சுகம் துக்கம் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். சாச்வதமான வஸ்து எது, அசாச்வதமான வஸ்து எது என்ற விசாரம் செய்யும் போது தர்க்க சாஸ்திரத்தில் சொல்லப்படுவது போல் 'ஆகாசம் நித்யம்; பிருத்வீ (பூமி) போன்றவை அநித்யம்'

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

என்ற விசாரம் நாம் செய்ய வேண்டியதில்லை, 'என்னுடைய ஸ்வரூபத்தைப் பற்றி ஆராய முனைந்தேனா?" என்ற விசாரத்தை நாம் செய்ய வேண்டும். ஆத்மா என்பது தான் நித்யமான வஸ்து. ஆத்மா நிலையானது என்பது சாஸ்திரங்களில் சிறந்த யுக்திகளினால் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால் பிரபஞ்சம் நிலையற்ற ஒன்று. பிரபஞ்சத்தில் தற்போது நாம் பார்க்கும் உருவம் இன்னும் சிறிது நேரத்தில் மறைந்து விடலாம். மேகம் எப்படி தன்னுடைய ரூபத்தை மாற்றிக் கொண்டிருக்குமோ அதே மாதிரி பிரபஞ்சமும் மாறிக் கொண்டிருக்கும். என்றாவது ஒரு நாள் பிரபஞ்சம் முழுவதும் இல்லாமல் போய் விடலாம். மற்றவர்கள் பிரபஞ்சம் இருக்கிறது என்று தெரிந்து கொண்டாலும் கூட ஒரு ஞானியின் பார்வையில் பிரபஞ்சம் இல்லை என்று தான் தீர்மானம். அதனால் நித்யமாயிருக்கப்பட்ட பொருள் ஒன்று உண்டு என்று நமக்குத் தெரிந்ததேயானால் அப்பொழுது நாம் உலகத்தில், அது வேண்டும்; 'இது வேண்டாம்' என்ற விருப்பு வெறுப்புகளை விட்டுவிட்டு அந்த நித்யமான பொருளை அடைவதற்காக முயற்சி செய்ய முடியும். அவ்வாறில்லாமல் இருந்தால், நாம் இந்த அநித்யமான பொருள்களிலேயே மூழ்கி நித்யமான பொருளை மறந்து விடுவோம். ..."

**பிரம்ம ஞானமே முழுமையான விவேகம்**

பரம்பொருளை நாடுபவன் புலன்களைக் கட்டுபடுத்தித் தன் மனதில் வளர்க்கும் நித்ய-அநித்ய வஸ்து விவேகம் எப்பொழுது உறுதியுறுகிறதோ, அப்பொழுது அவன் ஆத்மாவை அறிகிறான். இதை பகவத்பாதர் என்று கூறுகிறார்.;

देहोऽहमित्येव जडस्य बुद्धिर्देहे  च जीवे  विदुषस्त्वधीः । विवेकविज्ञानवतो महात्मनो ब्रह्माहमित्येव मतिः सदात्मनः ॥

(இந்த உடலே நான்' என்று முட்டாள் எண்ணுகிறான். சாஸ்திரத்தைக் கற்றவனுக்கு உடலிலும் ஜீவனிலும் 'நான்' என்கிற புத்தி இருக்கிறது. விவேகத்தினால் விளையும் ஆத்ம ஞானத்தை அடைந்த மஹாத் மாவுக்கு எப்பொழுதும் "நான் பிரம்மம்" என்று அறிவே இருக்கிறது.)

இந்த சுலோகத்தில் உள்ள "विवेकविज्ञानवत:" என்ற சொற்றொடருக்கு ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதி மஹாஸ்வாமிகள்,'... ஆத்மாவிற்கும் ஆத்மா அல்லாததற்கும் உள்ள வேற்றுமையைப் பகுத்தறிந்தவனுக்கு; எந்த ஞானம் ஆத்மா அல்லாததை ஆத்மாவிலிருந்து முழுமையாக அகற்றுவதால் விளைகிறதோ, அந்த ஞானத்தை நேரடியாக உணர்ந்தவனுக்கு -"என்று உரையெழுதுகிறார்.

(தொடரும்.....) மிக்க நன்றி : Centre for Brahmavidya

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

## நீதி மஞ்ஜரீ

### ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

**அத்தியாயம் - 3**

**இல்லற தர்மம்**

"பர்த்தா எங்கேயாவது போய்விட்டு வீட்டிற்கு; திரும்பினாராகில், அப்பொழுது நீ என்ன காரியத்தில் ஈடுபட்டிலிருந்தாலும் அதை நிறுத்திவிட்டு எழுந்து உடனே ஜலம் கொணர்ந்து கால்களை அலம்ப வேண்டும். அவருடைய வாழ்க்கையிலோ ஸுகத்திலோ அவருடைய நோக்கப்படி நீ நடந்துகொள்ளவேண்டுமே தவிர, சிறிதளவுகூட உதாஸீனமாயிருக்கக் கூடாது. பர்த்தா க்ருஹத்தில் இல்லாத ஸமயத்தில் அவரைச் சேர்ந்தவர்களோ பெரியோர்களோ வீட்டிற்கு எப்பொழுதேனும் வரலாம். அப்படி வந்தால் அவர்களை பஹுமானித்துப் பூஜிக்கவேண்டும். அவ்விதம் ஸத்காரம் செய்யாத விஷயத்தில் அவர்கள் குலத்தையே எரித்துவிடுவார்கள். பெற்றோர்களிடத்தில் போலவே மாமனார் மாமியாரிடத்திலும் ஒத்து நடந்து கொள்ளவேண்டும். அப்படியே பர்த்தாவின் உடன்பிறந்த மைத்துனர்களிடமும் நடந்து கொள்ளவேண்டும். ஸ்நேஹத்துடனிருந்த போதிலும் அவர்களுக்குக் கோபம் ஏற்பட்டுவிட்டால், ஒருவருக்கொருவர் இருந்துவரும் ஒற்றுமையைப் பிளந்துவிடுவார்கள்."

பெண்கள் புக்ககத்திற்குப் போரும்போது அவர்களுக்கு நன்கு புத்திமதி சொல்லியனுப்பவேண்டிய பொறுப்பு பெற்றோர்களுக்குண்டென்பதை இவ்வுபதேசங்கள் எடுத்துக் காட்டுகின்றன. ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸீதையிடத்தில் இல்றை தர்மத்தைப்பற்றி அவள் மாமியார் கௌஸல்யையும், அத்ரி மஹர்ஷியின் பத்தினியான அன்ஸூயா தேவியும் விஸ்தாரமாக சொல்கிறார்கள். ஸீதைக்குப் பிறந்தகத்தில் இவ்விதம் ஜனக மகாராஜனோ அவர் பத்தினியோ உபதேசித்ததாக வியக்தமாக காணப்படவில்லை. இதிலிருந்து அவர்கள் தங்கள் கடமைப்படி பெண்ணுக்குப் புத்திமதி சொல்லவில்லையென்றோ, எடுத்து வளர்த்த பெண்தானே என்று உதாஸீனமாயிருந்து விட்டார்களென்றோ தீர்மானிக்கக்கூடாது. ஸீதாதேவியை ஸ்ரீராமரிடம் ஒப்புவிக்கும்போதே அவளை "ஸகதர்மசரீ" (கூடவிருந்து தர்மத்தை அனுஷ்டிக்கும். ஸுபாவமுள்ளவள்) என்று சொல்லிவிட்டு "பதிவிரதை. மகா பாக்கியவதீ, எப்பொழுதும் நிழல் (காந்தி) போலவே கூடவிருப்பவள் என்று சொன்ன வார்த்தையில் எல்லா அடங்கியிருக்கின்றன. வனவாஸத்திற்குப் ஸ்ரீராமரை அலக்ஷ்யம் செய்யகூடாதென்று உபதேசங்களும் புறப்படும்போது கௌஸல்யை சொன்னவுடன் பர்த்தாவிடம் எப்படி நடந்து

கொள்ளவேண்டுமென்ற விஷயத்தைத் தான் நன்கு அறிந்திருப்பதாகவும் கேட்டிருப்பதாகவும் ஸீதை சொல்கிறாள்.

அப்படியே அனஸூயையினிடத்திலும் ஸ்த்ரீகளுக்குப் பதிதான் குரு என்ற விஷயம் தனக்கும் தெரியும் என்கிறாள். மாமியார் சொல்வதற்கு முன் இவ்விஷயத்தை அவளுக்கு வற்புறுத்தி போதித்தது யார் என்பதையும் அவளே சொல்கிறாள். "முன்னால் பாணிக்ரஹண ஸமயத்தில் அக்னியின் முன்னிலையில் தாயாரால் உபதேசிக்கப்பட்டிருக்கிறேன். அந்த வார்த்தையும் நன்கு ஞாபகத்தில் இருந்து வருகிறது." இதிலிருந்து ஜனகருடைய பத்தினியும் பதிவிரதா தர்மத்தை ஸீதைக்கு எடுத்துச் சொல்லியிருப்பதாகத் தெரிகிறது.

ஸ்த்ரீகளுக்கு பதிவிரதா தர்மமே முக்கியமென்பதினால் மற்ற தர்மங்களை அனுஷ்டிக்கக்கூடாதென்று தாத்பர்யமில்லை. ஶ்ரீமத் ராமாயணத்தை கவனித்தால் கௌஸல்யா தேவி பலவித விரதங்களை அனுஷ்டித்து வந்ததாகவும் ப்ராஹ்மணர்களைக்கொண்டு பலவித ஹோமங்களையும் செய்து வந்ததாகவும் தெரிகிறது. ஆனால் எல்லாம் பர்த்தாவின் அனுமதி பெற்றுக்கொண்டு செய்யவேண்டும். பர்த்தாவை உதாஸீனம் செய்துவிட்டு தர்மம் ஏராளமாய் செய்கிறேனென்றால் அது அதர்மமேயாகும். வேறு எந்த தர்மம் செய்யாமலிருந்தாலும்கூட பதிசுசுரூஷை ஒன்றே ஸ்த்ரீகளுக்குப் போதுமானது.

व्रतोपवासनिरता या नारी परमोत्तमा || भर्तारं नानुवर्तेत सा च पापगतिर्भवेत् । भर्तुः शुश्रूषया नारी लभते स्वर्गमुत्तमम् ॥
अपि या निर्नमस्कारा निवृत्ता देवपूजनात् | शुश्रूषमेव कुर्वीत भर्तुः प्रियहिते रता ||

சுசுரூஷையை வேண்டுமென்பது பிரியத்துடன் ஹிதமாகச் செய்ய எப்படி என்பதும் ஶ்ரீமத் ராமாயணத்தில் காண்கிறது. தசரதர் கௌசல்யையைப் பற்றிச் சொல்லும்போது, அவள் பத்னீ என்ற முறையில் நடந்து கொண்டதுடன் வேலைக்காரி மாதிரி வஸ்திரம் துவைத்துபோடுவது முதலான கார்யங்களையும் க்ருஹகிருத்யங்களையும் தானே செய்துவந்திருக்கிறாள்; ஸமானமாக உட்கார்ந்து பல விஷயங்களைப் பற்றிப் பேசுவதிலோ உத்ஸாஹமாயுள்ள விவஹாரங்களிலோ ஸ்நேஹிதி மாதிரி நடந்துகொள்வாள்; குடும்பக் கார்யங்களை கவனிப்பதிலோ மற்றும் விஷயங்களிலோ சஹோதரி மாதிரியிருப்பாள்; ஹிதமாய் காலம் தெரிந்து ஸௌகர்யங்கள் செய்துகொடுப்பதிலோ குலத்திலுள்ள பழக்க வழக்கங்கள் ஸம்பிரதாயங்களை எடுத்துச் சொல்லி அவசியம் போல் ஹிதத்தை போதிப்பதிலோ தாயார் மாதிரி நடந்துகொள்வாள் என்கிறார்.

(தொடரும் …) மிக்க நன்றி : ஶ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ||श्रीशारदास्तोत्रम्||

### श्रीशृङ्गाद्रौ श्रीशारदानवरात्रोत्सवसमये

### ஶ்ரீஶாரதா$^3$ஸ்தோத்ரம்

### (ஶ்ரீ சிருங்க கிரியில் சாரதாநவராத்திரியின்போது)

**(ஶ்ரீ சிருங்ககிரி ஶ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஶ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)**

विरिञ्चिहृदयाम्बुजप्रमददानसूर्यप्रभे विचित्रगतिचातुरीप्रथितपादपङ्केरुहे।
करोति किमयं सदा गमनचातुरीप्राप्तये मरालकुलनायकस्तव पदाब्जसेवां मुदा ||१४||

விரிஞ்சிஹ்ரு'த$^3$யாம்பு$^3$ஜப்ரமத$^3$தா$^3$னஸூர்யப்ரபே$^4$
விசித்ரக$^3$திசாதுரீப்ரதி$^2$தபாத$^3$பங்கேருஹே |
கரோதி கிமயம்' ஸதா$^3$ க$^3$மனசாதுரீப்ராப்தயே மராலகுலநாயகஸ்தவ
பதா$^3$ப்$^3$ஜஸேவாம்' முதா$^3$ ||14||

பிரும்மாவின் இதயத்தாமரையின் முழுமலர்ச்சி என்ற மதர்த்த நிலையை வழங்குவதில் ஸூரிய ஒளியாயிருப்பவளே! வியப்பிற்குரிய நடையழகால் புகழ்பெற்ற தாமரை போன்ற சரணங்களுள்ளவளே! அந்த ஹம்ஸகுலத்திற்கு முன்னோடியான இந்த ஹம்ஸம் நடையின் அழகைப்பெற எப்போதும் உன் சரணங்களுக்கு ஸேவை புரிகிறதோ?(14)

हंसो बाह्यान्धकारप्रदलनचतुरो ह्यह्नि मोदप्रदायी पद्मानामेष मेऽन्तः स्थिततिमिरततेर्वारयित्र्याश्च रात्रौ ।
अप्यामोदप्रदात्र्या नतहृदयसरोजातपङ्क्तेरधस्तात् भूतो हीत्येव बोधं रचयितुमिव किं हंसमारोहसीशे ॥

ஹம்'ஸோ பா$^3$ஹ்யாந்த$^4$காரப்ரத$^3$லனசதுரோ ஹ்யஹ்னி மோத$^3$ப்ரதா$^3$யீ
பத்$^3$மாநாமேஷ மே(அ)ந்த: ஸ்தி$^2$ததிமிரததேர்வாரயித்ர்யாஶ்ச ராத்ரௌ |
அப்யாமோத$^3$ப்ரதா$^3$த்ர்யா நதஹ்ரு'த$^3$யஸரோஜாதபங்க்தேரத$^4$ஸ்தாத் பூ$^4$தோ ஹீத்யேவ
போ$^3$த$^4$ம்' ரசயிதுமிவ கிம்' ஹம்'ஸமாரோஹஸீஶே ||15||

ஈச்வரி ! அந்த ஹம்ஸன் (ஸூரியன்) வெளியிருளைச் சிதறச் செய்வதில் தேர்ந்தவன். பகலில் தாமரைகளுக்கு ஆனந்தத்தைத் தருபவன். என் உள்ளத்தினுள் உள்ள கடும் இருளை அகற்றுபவளும், இரவிலும் தன்னை வணங்குபவரின் உள்ளமாகிய தாமரைக்குவியல்களுக்கும் ஆனந்த மளிக்கிறவளுமான தேவிக்குக் கீழே அந்த ஹம்ஸன் உள்ளான் எனக் காட்டவே நீ ஹம்ஸத்தின் மீதேறியுள்ளாயோ? (ஹம்ஸ். சூரியன், ஹம்ஸப் பறவை என இருபொருட்கள் கொண்டது. ஹம்ஸ என்ற ஸூர்யன் வானில் உலாவுவான். வெளி இருளை அகலச் செய்வான். பகலில் தாமரையை மலரச் செய்வாள். தேவியோ உள்ளத் திருளையும் அகற்றுவாள். இரவிலும் உள்ளத் தாமரையை மலரச் செய்வாள். அதனால் வானில் உலாவுகிற சூர்யன் (ஹம்ஸன்) தன் தாழ் நிலையை உணர்ந்து ஹம்ஸமாகித் தேவியின் வாஹனமானான். தேவி ஹம்ஸன் தன்னைவிடத் தாழ்ந்த தெனக் காட்ட அதனை வாஹனமாக்கிக் கொண்டாள். என்று கற்பனை விரிந்து கொண்டே போகும். (தொடரும் ...)

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஸ்ரீமத் வால்மீகி ராமாயண மாஹாத்ம்யம்

## (வால்மீகி ராமாயணத்தின் சிறப்பு)

**(ஸ்ரீ ஸ்கந்தபுராணம் உத்தரகண்டத்தில் நாரதர்-ஸநத்குமாரரிடையே நடந்த உரையாடல்)**

### அத்தியாயம் : நான்கு

### சைத்ர மாதத்தில் இராமாயணத்தைக் கேட்பதால் ஏற்படும் பலன்: கலிகன்-உத்தங்கன் வரலாறுகள்

**உத்தங்கர் கூறுகிறார்-**
இராமாயணத்தைக் கேட்டு, பாவங்கள் நீங்கப் பெற்று, தேவலோகத்திலிருந்து வந்த விமானத்தில் ஏறிக்கொண்ட அவன் (கலிகன்), உத்தங்கரைப் பார்த்துக் கூறினான்— 'மகாபாவங்களின் விளைவான துன்பங்களிலிருந்து, தங்கள் அருளால் நான் விடுப்பட்டுவிட்டேன். பேரறிஞரே! தங்கள் திருவடிகளில் விழுந்து வணங்குகிறேன். நான் செய்த குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும்.

**ஸூதர் கூறுகிறார்-** இவ்வாறு கூறிமுடித்த கலிகன், (விமானத்திலிருந்து இறங்கி வந்து) மாமுனிவரான உத்தங்கர் மீது, தேவலோக மலர்களை மாரியாகப் பொழிந்தான். மூன்று முறை அவரை வலம் வந்து நமஸ்காரம் செய்தான். எல்லா வகையான போகப் பொருள்கள் நிரம்பியதும், அப்சரப் பெண்டிர் கூட்டமாக இருந்ததுமான விமானத்தில் ஏறி. பகவான் ஸ்ரீஹரியின் வாசஸ்தலமான பரமபதத்தை அடைந்தான்.

ஆகவே, வேதவிற்பன்னர்களே! சைத்ர மாத வளர்பிறையில் மிகவும் பக்தி-சிரத்தையுடன் தொடர்ந்து ஒன்பது நாட்கள் இராமாயணத்தைக் கேளுங்கள். மேலும், இராமாயணம் எல்லா ருதுக்களிலும் படித்துப் பயனடையத்தக்கது. இவ்வாறு ஸ்ரீஹரியை வழிபடுபவன். தான் விரும்பியவற்றையெல்லாம் அடைகிறான் என்பதில் ஐயமில்லை.



சனத்குமாரரே ! இராமாயணத்தின் பெருமையைப் பற்றி, உங்களால் கேட்கப்பட்ட எல்லாக் கேள்விகளுக்கும் நான் பதில் சொல்லிவிட்டேன். இனி, வேறு என்ன கேட்க விரும்புகிறீர்கள்?

ஸ்ரீஸ்கந்தபுராணம், இராமாயண மாஹாத்ம்யம் என்ற பகுதியில் நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

### அத்தியாயம் : ஐந்து

### இராமாயணத்தை ஒன்பது நாட்கள் கேட்கும் விதிமுறை: மகிமை மற்றும் பலன்களின் விவரம்

**ஸூதர் கூறுகிறார்** - இராமாயணத்தின் மகிமைகளைக் கேட்டு, மாமுனிவரான சனத்குமாரர் மிகவும் ஆனந்தம் அடைந்தார். முனிவர்களுள் தலைசிறந்தவரான நாரதரைப் பார்த்து மீண்டும் வினவினார்.


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita


## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)



**சனத்குமாரர் கூறுகிறார்-** மாமுனிவரே தாங்கள் இராமாயணத்தின் மகிமைகளை விளக்கிக் கூறினீர்கள். இப்போது, இராமாயணத்தைப் படிக்கும் விதிமுறைகளைக் கேட்க விரும்புகிறேன். மகாபுண்ணியசாலியான முனிவரே பரம்பொருள் தத்துவத்தை நன்குணர்ந்தவரே! தாங்கள் மிகவும் அருள்கூர்ந்து இந்த விஷயத்தைப் பற்றியும் விளக்கமாகக் கூறவேண்டும்.

**நாரதர் கூறுகிறார்-** எல்லா உலகங்களிலும் பிரசித்தி பெற்றதும், சுவர்க்க போகத்தையும் மோட்சத்தையும் அளிக்கவல்லதுமான இராமாயணத்தைப் படிக்கும் முறைகளை ஒருமுகப்பட்ட மனத்துடன் கேளுங்கள். பக்தியுணர்வில் திளைத்து இராமாயணம் படிக்கும் வழிமுறைகளை நான் சொல்லப் போகிறேன், கேளுங்கள். எதைப் படிப்பதால் (கேட்பதால்) கோடிக்கணக்கான பாவங்கள் அழிந்து போகின்றனவோ. அத்தகைய மகிமை வாய்ந்த இராமாயணத்தை, சித்திரை-மாசி-கார்த்திகை மாத வளர்பிறை துவக்கத்தில், அல்லது, ஐந்தாம் நாளிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். தொடக்க நாளில், வேதவிற்பன்னர்களைக் கொண்டு ஸ்வஸ்திவாசனம் என்ற மங்கள கர்மாவைச் செய்ய வேண்டும். தொடர்ந்து ஒன்பது நாட்கள் இராமாயண சரிதாம்ருதத்தைச் செவிகளால் கேட்பதாக சங்கல்பம் செய்து கொள்ள வேண்டும். 'ஸ்ரீராமா! இன்று முதல், நாள்தோறும், நான் தங்கள் கதையாகிய அம்ருதத்தைக் கேட்கப் போகிறேன். தங்கள் எல்லையற்ற அருளால் என் விருப்பம் நிறைவேற வேண்டும் (என்று பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்). (தொடரும்...)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்